CANE

வைகாசி 2008 செய்திமடல்
வடகிழக்கு இலங்கைக்கான புற்றுநோய் உதவி

Volume 3 Issue 1

May 2008

## கேன் (CANE) யாழ்ப்பாண ஹாஸ்பிஸ் திட்டங்கள்



ஹாஸ்பிஸ் கட்டிடம் அலுவலகம் & பூங்கா

கேனிற்கு இவ்வாண்டு இதுவரை நம்பிக்கையளிக்கும் ஆண்டாக அமைந்து வருகிறது. மேலும் கீழ் காணும் புதிய வளர்ச்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

**மருத்துவ கல்வி வசதிகள் மற்றும் செயல்பாடுகள்:** மடிக்கணனி, திரை மற்றும் இருக்கைகளை வாங்குவதற்கு பகுதி நிதியுதவி அளித்த Surrey 'உதவிக்கரங்களின்' பெண்களுக்கு நன்றிகள். இவை புற்று நோய் தடுப்பு மற்றும் வேதனை தணிக்கும் சேவை ஆகிய துறையில் தாதியர், மருத்துவ உதவியாளர்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் சுகாதார சார் பணியாளர்களின் கல்வி மற்றும் பயற்சிக்கு உதவியாக இருக்கும.

**சமையலறை:** நெடுந்தூரத்திலிருந்து வரும் நோயாளிகள், அவர்களது உறவினர்கள் மற்றும் பார்வையாளர்களின் நலன் கருதி சமையலறையை வெளியிலிருந்து சமைத்த உணவை வாங்கி உண்ணும் வசதி கொண்ட கட்டிடமாக கட்டுவதற்குப் பதிலாக அதை சமைப்பதற்கேற்ற வசதிகளோடு கட்டுமாறு கேன் யாழ்ப்பாண நிர்வாகக்குழுக் கேட்டுக்கொண்டது. இது கேன் (ஐக்கிய இராச்சியம்) நிதி உதவியுடன் கட்டப்பட்டு வருகிறது.

**பகல் சேவை மையம்:**

தெல்லிப்பளை வைத்தியசாலையில் கதிர்சிகிக்சைக்காக (Radiotherapy) காத்திருக்கும் நோயாளிகள் குறுகிய காலத்திற்கு அல்லது தற்காலிகமாக தங்குவதற்கென இம்மையம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வைத்தியசாலை இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலையத்திற்குள் அமைந்திருப்பதால் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நோயாளிகளே ஒரு நேரத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகிறார்கள். நோயாளிகள் குழுக்களாக பகல் நேர சேவை மையத்திலிருந்து தெலிப்பளை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள். கதிர்சிகிச்சை முடிந்த பின்பு அவர்கள் பகல் சேவை மையத்திற்கு திரும்பி கொண்டுவரப்பட்டு சிற்றுண்டி அளித்தபின்பு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இந்த போக்குவரத்திற்காக ஹாஸ்பிஸ்ஸின் ஊர்தி பயன்படுத்தப்படுகிறது.

நிதி மற்றும் ஆதரவு பெறும் தருணத்தில் ஒரு பகுதி நேர வெளிநோயாளிகள் சேவையொன்றையும் இங்கிருந்து நடத்த முடியும். சேவை மையத்தில் பாவிப்பதற்கென்று எடுத்துச் செல்லும் வசதியுடைய நுண்ஒலி (ultrasound)) இயந்திரமொன்றையும் வாங்க இருக்கின்றோம். டாக்டர். ஜெயகுமார் பல்வேறு இடங்களில் நடத்தும் மருத்து நிலையங்களில் நோயாளிகளை பரிசோதிப்பதற்கு இந்த இயந்திரம் எடுத்துச் செல்லப்படும். நுண்ஒலி பரிசோதனையை தேவையான புற்று நோயாளிகளுக்கு தொடர்ந்து மேற்கொள்ளுவதன் மூலம் அவர்களுக்கான தொடர் சிகிச்சையை முடிவு செய்ய இயலும் என டாக்டர். ஜெயகுமாரும் கேனும் கருதுகின்றனர்.

இந்த இயந்திரத்தை வாங்குவதற்கான நிதி திரட்டும் நிகழ்ச்சியொன்று ஜுன் 28 ஆம் திகதி 2008 நடைபெற இருக்கின்றது (விபரங்களை இணைய தளத்தில் பார்க்கவும்)

கேன் ஐக்கிய இராச்சிய புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்களை வரவேற்கின்றோம்: டாக்டர். ஆ. பார்த்தீபன் மற்றும் டாக்டர். க. அருணாசலம்.

கேன் யாழ்ப்பாண ஹாஸ்பிஸ் மற்றும் அது தொடர்பான திட்டங்களுக்கு தன்னார்வ சேவை மற்றும் உதவிகள் அளித்து வரும் கேன் யாழ்ப்பாண நிர்வாகக்குழுவிற்கு நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம்.

ஹாஸ்பிஸ் கட்டிட திட்டத்தை ஆரம்பம் முதல் முடிவு வரை கண்காணித்து பங்களிப்பு செய்த எமது முன்னாள் செயலாளர் மற்றும் ஆரம்ப கால உறுப்பினர் திரு.ச.சபாநாயகம் அவர்களுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.



பூங்காவில் ஓய்வு கொள்ளும் நோயாளிகள்

கேன் யாழ்ப்பாண முன்னாள் தலைவரும் தற்போதைய கேன் யாழ்ப்பாண நிர்வாகக்குழு உறுப்பினருமான டாக்டர்.(செல்வி) ந. கனகரட்னம் அவர்களின் இழப்பை அறிவிப்பதோடு மிக வருந்துகின்றோம். அவர் கேன் தோற்றத்திலிருந்தே பல வழிகளில் உதவியிருக்கின்றார். தெல்லிப்பளையில் கதிர்சிகிச்சை மீள தொடங்குவதற்கு அவர் முக்கிய காரணமாக இருந்தார். அவர் யாழ்ப்பாண கற்பிக்கும் வைத்தியசாலையின் முன்னாள் சுகாதார மேலதிகாரியாகவும் இருந்திருக்கின்றார். யாழ்ப்பாண மக்களுக்கும், கேனிற்கு அவர் ஆற்றிய சேவையை நாங்கள் நினைவு கூறுவதோடு எமது இரங்கலையும் வருத்தத்தையும் அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம்.



➔

CANE

வைகாசி 2008 செய்திமடல்
வடகிழக்கு இலங்கைக்கான புற்றுநோய் உதவி

Volume 3 Issue 1

May 2008

**கேன் யாழ்ப்பாண நிர்வாகக் குழு**

Dr N. சிவராஜா (தலைவர்)

Dr N. ஜெயகுமார் (செயலாளர்)

Mr M. தியாகராஜா (பொருளாளர்)

Dr T. பேரானந்தராஜா

Mr A. ஆறு திருமுருகன்

இன்னும் பல மேன்மையான செயல்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நிதி தேவைப்படுகிறது

கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஏதாவது செலவினங்களுக்கான நிதியினை தொடர்ந்தோ அல்லது ஒரு முறையாகவோ அளிக்க எமது சமூகத்தினரையும், நல்லெண்ணம் உடையோரையும், நண்பர்களையும் (தனித்தோ அல்லது குழுவாகவோ) கேட்டுக்கொள்ளுகின்றோம். (உதாரணம்: உணவிற்கான செலவு அல்லது ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட விடயத்திற்கான செலவு)

| எண் | கேன் யாழ்ப்பாண ஹொஸ்பிஸ் செலவினங்கள் | 2007 ற்கான மொத்தம் | மாதாந்தர செலவு |
|---|---|---|---|
| 1 | பணியாளர்கள் ஊதியம் (முழுநேர மற்றும் பகுதி நேர) | 1435294.06 | 119607.83 |
| 2 | மிஞ்சிய நேரத்திற்கான தாதியர் உதவியாளர்கள் | 80147.45 | 6678.95 |
| 3 | உணவு செலவு தேனீர், பால் மற்றும் பழங்கள் | 243466.75 | 20288.9 |
| 4 | சலவை சவுக்காரம், சுத்தம் செய்யும் பொருட்கள் | 20666.00 | 1722.17 |
| 5 | மருந்துகள் | 104542.50 | 8711.87 |
| 6 | நடமாடும் புற்றுநோய் ஆய்வுத் திட்டம் | 29204.00 | 2433.67 |
| 7 | மின்சாரம் (Aggrekko சர்வதேசஸ்தாபனத்தின் நிதியுதவி) | 103795.30 | 8649.60 |
| 8 | தொலைபேசி, இணைய தளம் | 51211.00 | 4267.58 |
| 9 | பெட்ரோல் | 62172.50 | 5181.04 |
| 10 | ஜெனரேட்டருக்கான டீசல் | 7024.00 | 585.33 |
| 11 | சமையலுக்கான கெரசின் | 30575.09 | 2547.92 |
| 12 | அச்சு மற்றும் அலுவலக பொருட்கள் | 32720.80 | 2726.73 |
| 13 | கடித தொடர்பு, தொலை நகல், நகல் இயந்திரம் | 20008.00 | 1667.33 |
| 14 | செய்தித் தாள் | 3745.00 | 312.08 |
| 15 | கட்டிட பராமரிப்பு | 20383.00 | 1698.58 |
| 16 | ஜெனரேட்டர் பராமரிப்பு | 13090.00 | 1090.83 |
| 17 | ஊர்தி பராமரிப்பு | 15630.00 | 1302.50 |
| 18 | அலுவலக உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு | 7474.75 | 622.90 |
| 19 | நோயாளிகள் பயண செலவு | 5220.00 | 435.00 |
| 20 | சிற்றுண்டி | 1803.00 | 150.25 |
| 21 | ஜெப அறை (பூஜை) | 3811.00 | 317.58 |
| 22 | மிதிவண்டி பராமரிப்பு | 2420.00 | 201.67 |
| 25 | சீருடை | 12830.00 | 1069.16 |
| 28 | உடற்கட்டி பரிசோதனைக்கான செலவு | 537360.00 | 44780.00 |
| 29 | வங்கி செலவு | 4671.27 | 389.27 |
| 30 | கட்டிடத்திற்கான காப்புறுதி | 123451.42 | 10287.62 |
| 31 | கணக்கு ஆய்வு (Accountancy) | 102600.00 | 8550.00 |
| 32 | விளம்பரம் | 27603.00 | 2300.25 |
| 33 | Provident fund for Employees செலவு | 383990.86 | 31999.24 |
| | **மொத்தம்** | **3486910.75** | **290575.85** |